# ஹொரண பிரதேச சபை
# களுத்துறை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஒக்டோபர் 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 பெப்ரவரி 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

---

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஹொரண பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 96,000 தொகையான சம்பள முற்பணத்தை மீள அறவிடுகையில் முற்பணக் கணக்கிற்கு சீராக்கப்படுவதற்குப் பதிலாக வருமானச் செலவினக் கணக்கில், நானாவித வருமானக் கணக்கில் சேர்க்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது வருமானச் செலவினக் கணக்கின் மீதி அதே தொகையால் அதிகரித்துக் காண்பித்திருந்தது.

(ஆ) 2012 செப்தெம்பர் 06 ஆம் திகதி மக்கள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 5,000,000 தொகையான நிலையான வைப்புக்களும் அவ் வைப்புக்கள் முதிர்வடைகையில் (2012.12.05 ஆம் திகதி) பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த வட்டி வருமானத் தொகையான ரூபா 174,521 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இங்கிரிய நூலகம் நிர்மாணிக்கப்படுவதற்காக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 11,171,172 தொகையான பேரேட்டின் செலவினத் தலைப்பு 609 இற்கு வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கு உரித்தான செலவுப் பதிவு கடன்கொடுத்தோர் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை

(ஈ) மீளாய்வாண்டின் போது ஒரு வங்கி நடைமுறைக் கணக்கில் இருந்து வேறு வங்கி நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 1,500,000 தொகையான மூலதனச் செலவினமாகக் கருதப்பட்டு செலவினத் தலைப்பு 609 இற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

## 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 94,879,441 தொகையான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### (ஆ) கொடுப்பனவு உறுதிச்சீட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை

ரூபா 2,317,335 கூட்டுத்தொகையான 71 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் 2014 பெப்ரவரி 06 ஆம் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,725,348 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,518,053 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 14,465 | 13,265 | 13,167 |
| (ii) | வாடகை | 3,446 | 2,550 | 1,809 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,203 | 890 | 313 |
| (iv) | ஏனைய வருமானம் | 26,731 | 35,821 | -- |

**2.2.2 வீதவரி**

போருவதன்ட உப அலுவலக அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிக்கு உரித்தான முதலீட்டு வலயமாகக் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தில் பேணப்பட்டு வரும் 15

தொழிற்சாலைகளில் 2008 முதல் 2012 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட வேண்டிய நிலுவையான வீதவரி மீதி ரூபா 6,874,924 ஆகக் காணப்பட்டன.

### 2.2.3 கடை வாடகை

---------------------

இங்கிரிய உப அலுவலகத்தின் புதிய விற்பனைத் தொகுதியில் 23 கடைகளிலிருந்தும் பொதுச் சந்தையின் 36 கடைகளிலிருந்தும் ரூபா 1,533,578 தொகை 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.4 காணி ஏலவிற்பனையிலான வரி அறிவீடு

-------------------------------------------------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 154(1) இன் பிரகாரம் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் உள்ள ஓர் காணி விற்பனை செய்யப்படுகையில் அல்லது ஏலவிற்பனை செய்யப்படுகையில் அக் காணி விற்பனையின் மூலம் கிடைக்கப்பெற்ற தொகையில் 1% இற்குச் சமனான வரி சபையால் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது 36 காணி விற்பனையின் மூலம் வரியாக ரூபா 2,258,280 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் அத் தொகை மதிப்பிடப்பட்ட தொகையில் 1% ஆகக் காணப்பட்டதுடன் எச் சந்தர்ப்பத்திலும் காணி விற்பனைப் பெறுமதியின் 1% இனை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1986 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய இலங்கைக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் I ஆம் பகுதியின் (i) ஆம் பந்தியின் 22(1) இன் பிரகாரம் உப கூறுகளாக்கப்படுவதற்கு கருதப்படும் காணி 1 ஹெக்டேயருக்கு மேற்படும் பட்சத்தில் பாதைக்காக ஒதுக்கப்பட்டதை அடுத்து விற்பனை செய்யப்பட்ட காணியின் அளவில் 10% அளவு பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டு இது சபை வசம் கையேற்கப்பட வேண்டிய போதிலும் 4 காணி விற்பனையின் போது பொது வசதிகளுக்காக

ஒதுக்கப்பட்ட காணிகளின் உறுதியைச் சபை கையேற்றுள்ளமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 ஆம் ஆண்டின் போது பொது வசதிகளுக்காகக் கையேற்கப்பட்ட 3 காணிகளின் எல்லைகள் ஒதுக்கப்பட்டிராததுடன் கணக்காய்வுத் தினமாகிய 2012 நவம்பர் வரையிலும் எவ்வித பொது வசதிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 6,954,087 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 35,712,584 |

### 2.2.3 அப்பியாசக் கொப்பிகள் பகிர்ந்தளிப்பு

---

சன சமூகத்தினூடாக பிள்ளைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்காக ரூபா 1,735,320 பெறுமதியான பல்வேறு வகையிலான 64,550 கொப்பிகள் அரசாங்க அச்சகத்தால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இக் கொப்பிகள் பகிர்ந்தளிப்பு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஒவ்வொரு சன சமூக நிலையத்திலிருந்தும் கொப்பிகளுக்கான கேள்வி கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் அக் கேள்விகளில் எந்தளவு கொப்பிகள் தேவை என்பது குறித்து குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்த கொப்பிகளின் அளவும் சபையின் சன சமூக உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) ஒவ்வொரு சன சமூக நிலையத்திற்காக எந்தளவு கொப்பிகள் விநியோகிக்கப்பட்டன என்பதனை உறுதிப்படுத்தும் எவ்வித சான்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொப்பிகள் ஒப்படைக்கப்படும் பத்திரங்களில் கொப்பிகளைப் பெற்ற பிள்ளைகளின் பெயர், பாதுகாவலரின் பெயர், பாடசாலை, வகுப்பு மற்றும் கொப்பிகள் பெற்றுக்கொள்ளப்பட்டமை குறித்து கையொப்பமிடும் நிரல் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கொப்பிகளின் எண்ணிக்கை காணப்படும் நிரல் பூர்த்தி செய்யப்படாதிருந்தது.

**2.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

-----------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 132 (ஏ) பிரிவின் பிரகாரம் விநோத, கல்வி, புண்ணிய மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்காக உதவிப் பணம் வழங்கப்படுகையில் மொத்தக் கூட்டுத்தொகை ஆயிரம் ரூபாவிற்கு மேற்படலாகாதெனவும் அவ் எல்லை அதிகரிக்குமாயின் அமைச்சரின் முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதாக இருக்கையில் அமைச்சரின் எந்தவித அங்கீகாரமும் பெறப்படாதும் ஒரு வருடத்திற்கு ஆயிரம் ரூபா உச்ச எல்லை பின்பற்றப்படாது 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1,532,362 தொகை செலவிடப்பட்டிருந்தது.

2011 ஆம் ஆண்டின் போது அமைச்சரின் முன்னங்கீகாரம் இன்றி செலவிடப்பட்டிருந்த மேற்குறித்த ரூபா 1,212,614 தொகையான செலவினம் தொடர்பாக அமைச்சரின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 5/4/2/V ஆம் இலக்க 2012 செப்தெம்பர் 13 ஆம் திகதிய கோரிக்கைக்காகவும் 2012 ஒக்டோபர் 08 ஆம் திகதிய எல்ஜீடீ/5/8/பீ/24 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அச் செலவினத்திற்கான அங்கீகாரம் வழங்கப்பட முடியாதெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 2.5 ஒப்பந்த நிர்வாகம்

### 2.5.1 2012 மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிணைப்புக்கல் பதிக்கப்படும் 84 செயற்திட்டங்களுக்காக ரூபா 51,554,583 தொகையான ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் 2012 நவம்பர் 26 ஆம் திகதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களில் ரூபா 46,181,575 தொகையான 74 செயற்திட்டங்கள் வேலை ஆரம்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட கணக்குகளில் ரூபா 675,000 தொகையான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 03 செயற்திட்டங்கள் கணக்காய்வுத் தினமாகிய 2013 நவம்பர் 06 ஆம் திகதி வரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 நவம்பர் 22 ஆம் திகதி பின்வரும் செயற்திட்டங்கள் பௌதீக ரீதியாக ஆய்வு செய்யப்படுகையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கோரல இம தேயிலைத் தோட்ட வீதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு குருகே ஏலவிற்பனை தோட்டத்திற்கு வரும் பாதை கொங்கிரீட் இடப்படும் செயற்திட்டத்தின் தொழிநுட்ப மாதிரியின் பிரகாரம் வீதியின் முடிவிலிருந்து ஆரம்பிக்கப்படும் திசைக்கு 23 அடிகளின் பின்னர் 15 சதுர அடி அளவில் வெடிப்பு ஏற்பட்டு உடைந்திருந்தது.

(ii) கொஸ்கொலவத்த வீதி கொங்கிரீட் இடும் தொழிநுட்ப மதிப்பீட்டிற்காக ரூபா 193,992 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் கொங்கிரீட் கலவையில் சீமேந்திற்கும் நீரிற்கும் இடையிலான விகிதாசாரத்தில் குறைபாடுகள் காரணமாக வீதிப்

பக்கமாக உள்ள கொங்கிரீட் அகன்று கற்கள் தோன்றியிருந்தன. வீதியின் முடிவில் 70 சதுர அடி அளவிலான கொங்கிரீட் கற்கள் களன்றுபோயிருந்தன.

**2.5.2 வீதி மறுசீரமைப்பு**

-------------------------------

(அ) வீதி செயற்திட்ட கோவைகளில் மறுசீரமைக்கப்பட்ட வீதி மற்றும் அதனுடன் தொடர்புடைய வேறு வீதி தெளிவாகக் காணப்படும் ஓர் திட்டம் காணப்படாமையால் செயற்திட்டங்களுக்கு உரித்தான வீதியை இனங்காண்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டிருந்தது.

(ஆ) வீதியின் அடித்தளத்தை தயாரிக்கையிலும் வீதியின் இரு மருங்கிலும் கற்கள் கொண்ட மண் இடப்பட்டு நிரப்பப்படுதல் போன்ற செயற்பாடுகள் மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டிராமையால் வீதியின் நெடுங்காலப்பயன் மற்றும் வீதியின் இருமருங்கும் உடைந்து செல்லும் ஆபத்து நிலவியது.

**2.6 சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படல்**

-------------------------------------------------------------------

2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விநியோகிக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு அதிகாரமளிக்கப்படுவது அதிகாரம் செயற்படுத்தப்படுவது தொடர்பான அறிவுறுத்தல் கைநூல் - சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் செயற்பாட்டின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் அனுப்பிவைக்கப்படுவது தொடர்பாக கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் இரத்தான 37 நிறுவனங்களிடமிருந்து மேலும் அந் நிறுவனங்கள் இயங்குகின்றனவா என்பது குறித்து உறுதிப்படுத்தப்பட்டு மீள அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்காக

கணக்காய்வுத் தினமாகிய 2012 நவம்பர் 26 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படக்கூடிய 25 துறைகளில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுடன் தொடர்பான சுற்றாடல் முறைகேடுகளைத் தடுத்தல், குறைத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான நிகழ்ச்சித்திட்டம் எதுவும் செயற்படுத்தப்பட்டமைக்கான தகவல்கள் இருக்கவில்லை.

## 2.7 காணி ஏலவிற்பனை

------------------------------------

கல்லெனேவத்த கொஸ்கஹவத்தை தென் பகுதி காணியின் 67 பிரிவுகளைக் கொண்ட 04 ஏக்கர், 03 ரூட், 6.9 பேர்ச் ஏலவிற்பனை செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதற்காக 4395 ஆம் இலக்க வரைபட உப பங்கீடு 2011 மே 06 ஆம் திகதியும் இக் காணியிலேயே 10 காணித் துண்டுகளைக் கொண்ட 02 ரூட், 21 பேர்ச் நில அளவு ஏலவிற்பனை செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதற்காக 4398 ஆம் இலக்க உப பிரிவு 2011 யூன் 13 ஆம் திகதியும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2012 நவம்பர் 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது கண்டறியப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(அ) அங்கீகரிக்கப்பட்ட 4395 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் சகல நிலப்பகுதியும் பிரித்து ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு உரித்தான நுழைவுப் பாதையை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் பொதுவான காணிப் பிரிவு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் வேலை அதிகாரியால் தினம் குறிப்பிடப்படாது பரிந்துரைக்கப்பட்டதுடன் 2011 மே 06 ஆம் திகதி தலைவரால் அது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 4395 ஆம் இலக்க வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 1 – 7 வரையிலும், 57 முதல் 67 வரையிலுமான நிலப்பகுதிகளுக்கு நுழைவுப் பாதை எதுவும் பகிரப்பட்டு ஒதுக்கி அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இவ்வாறே நுழைவில் இருந்து இரு மருங்கிலும் வடிகால்களை கொங்கிரீட் இட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 36 முதல் 48 வரையான வரைபட இலக்கம் வரை மாத்திரம் நுழைவில் இருந்து இடப்பக்க கால்வாய் முறைமையை கொங்கிரீட் இட்டிருந்ததுடன் ஏனைய பகுதிகளின் கால்வாய் முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 4398 ஆம் இலக்க வரைபடத்தின் காணியை அபிவிருத்தி செய்ததாக வேலை அதிகாரியால் பரிந்துரைசெய்து 2011 யூன் 13 ஆம் திகதி தலைவரால் காணி ஏலவிற்பனைக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 1 முதல் 10 வரையான காணிப் பகுதிகள் பிரித்து ஒதுக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இவ்வாறே இக் காணிப் பிரிவுகளுக்காக இரு பக்கக் கால்வாய் முறைமைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

### 2.8.1 பொருள் மெய்மையாய்வு

---

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வின் போது ஏலவிற்பனை செய்யப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டு ரூபா 76,265 தொகையான பெறுமதிக்கு மதிப்பிடப்பட்டிருந்த பொருட்கள் கணக்காய்வுத் தினமாகிய 2012 நவம்பர் 26 ஆம் திகதி வரையிலும் ஏலவிற்பனை செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குரித்தான 04 நூலகங்களில் பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.8.2 பதவியணியினர் கடன்**

பிரதேச சபையில் கடமையாற்றி சேவையை விட்டு விலகிச் சென்ற மற்றும் வேலை வறிதாக்கப்பட்ட 13 உத்தியோகத்தர்களிடமிருந்து 1998 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படுவதற்காக இருந்த பதவியணியினர் கடன் ரூபா 53,861 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2012 நவம்பர் 26 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8.3 கொள்வனவுத் திட்டம்**

வருடாந்த கொள்வனவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை.

**2.8.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2012 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் படி 33 செலவின விடயங்களுக்காக ரூபா 2,558,700 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இதில் எத் தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

**2.8.5 வங்கிக் கணக்குகள்**

கணக்காய்வுத் தினமாகிய 2013 நவம்பர் 06 வரையிலும் சபை பேணப்படும் 4 வங்கி நடைமுறைக் கணக்குகளில் 2012 யூன் மாதத்தின் பின்னர் எவ்வித வங்கி கணக்கிணக்கக் கூற்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(உ) பாதீடு